# தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு

## ஆண்டறிக்கை 2016

NASTEC


**தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு**

இல. 31.˙.9இ 31.˙.10இ டட்லி சேனாநாயக்க மாவத்தைஇ கொழும்பு- 08

தொலைபேசி: 011-2680711.˙.2680712

தொலைநகல்: 011 - 2680713

மின்னஞ்சல்: யெளவநஉளட;லயாழழ.உழஅ

இணையத்தளம்: ரறற.யெளவநஉ.டம

# ஆண்டறிக்கை *2016*

*தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுச் செயலகத்தின் வெளியீடு*

*ஆக்கம்: செல்வி. நிஷாந்தி மகறகே*
*தொகுப்பு: கலாநிதி. முடித லியனகெதற*

# உள்ளடக்கம்

உள்ளடக்கம் ........ 2
OUR VISSIONTable of Contents ........ 2
எம்மைப்பற்றி ........ 3
எமது தொலைநோக்கு ........ 4
Our Vision ........ 4
எமது செயற்பணி ........ 4
தலைவரின் மீளாய்வு ........ 5
ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ........ 7
நிறுவனத்தின் விபரத்திரட்டு ........ 13
நிறுவனக் கட்டமைப்பு ........ 14
விஞ்ஞான, தொழில்நுட்ப மீளாய்வுகள் ........ 15
விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் மீளாய்வுகள் ........ 15
வேறு செயற்பாடுகள் ........ 18
சர்வதேச உறவுகள் ........ 21
ஆலோசனை மன்றங்களின் செயற்பாடுகள் ........ 22
எமது உத்தியோகத்தர்கள் ........ 26
Our Staff ........ 26
உத்தியோகத்தர் செய்திகள் ........ 27
Events Attended by the StaffStaff News ........ 27
உத்தியோகர்கள் பங்குபற்றிய நிகழ்வுகள் ........ 27
AcknowledgementEvents Attended by the Staff ........ 27
நன்றி தெரிவித்தல் ........ 28
Financial StatementAcknowledgement ........ 28
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ........ 31
Auditor General's Report ........ 31

# எம்மைப்பற்றி

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு 1994ம் ஆண்டின் 11ம் இலக்க தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது 1998ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொழிற்பட ஆரம்பித்தது. இது 1998 மார்கழி 6 ஆம் திகதி உத்தியோகபூர்வ ரீதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1999 தை மாதம் முதல் முழுமையாக இயங்குகின்ற ஒரு நிறுவனமாக மாறியது.

இலங்கை அரசாங்கத்துக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கல் மற்றும் கொள்கை வகுத்தலுக்கான உயர் நிறுவனமாக நியமிக்கப்பட்டது. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்களை ஆணைக்குழு உள்ளடக்கியுள்ளது.

# எமது தொலைநோக்கு

*"இலங்கையின் மக்களின் சுபீட்சம் மற்றும் சௌபாக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு விஞ்ஞான, தொழில்நுட்பத்தின் ஆற்றல் மற்றும் பிரயோகம் பற்றி அரசாங்கத்திற்கு அறிவுரை வழங்கும் உயர் நிறுவனமாகத் திகழ்தல் "*

# எமது செயற்பணி

*"விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் உயர் திறன்களை தேசிய ரீதியில் கட்டியெழுப்புவதற்கான கொள்கைகள், உபாயங்கள் மற்றும் திட்டங்களை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தலும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை நிலையான அபிவிருத்திக்காக பிரயோகித்தலும்"*

# தலைவரின் மீளாய்வு



இலங்கையின் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் தலைவா் (NASTEC), 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளில் இந்த ஆய்வுகளை வெளியிட நான் மகிழ்ச்சியடைகிறேன்.

2016 ஆம் ஆண்டில், தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கட்டமைப்பிற்கு (NRDF) பூரணவடிவம் கொடுக்க முடிந்ததுடன், இலங்கையின் ஜனநாயக சோசலிசக் குடியரசின் உயா்திரு மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிற்கும் வழங்க முடிந்தது. அத்துடன் 2016 ஆம் ஆண்டிலேயே NRDF ஆனது அமைச்சரவை அமைச்சா்களால் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான தேசிய கட்டமைப்பாக அங்கீகரிக்கப்பட்டது. NRDF இனால் உடனடியாக தேசிய முக்கியத்துவமுடைய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் 10 கவனத்தில் எடுக்கப்பட்ட பகுதிகள் இனங்காணப்பட்டுள்ளது. உடனடி பொருளாதார அபிவிருத்தி மற்றும் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயா்த்துதல் சம்மந்தப்பட்ட பகுதிகளில் கொள்கை உருவாக்கம் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் சார்ந்த அபிவிருத்திதி திட்டங்களில் NRDF அரசாங்கத்திற்கு உதவுகிறது.

NASTEC 1994 ஆம் ஆண்டில் 11ஆம் இலக்க அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி 2016 ஆம் ஆண்டில் 31 தேசிய S&T நிறுவனங்களிலிருந்து வருடாந்த தேசிய S&T அறிக்கையை தயாரிப்பதற்காக தகவல் சேகரித்தது. பொது கருவூலத்திலிருந்து S&T நிறுவனங்களிற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவித்திக்காக ஒதுக்கப்பட்ட முழுத்தொகையையும் சில S&T நிறுவனங்கள் செலவழிக்கவில்லை என்பது திரட்டப்பட்ட தகவல்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. மேலும் சில சந்தைப்படுத்தக் கூடிய பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் மட்டுமே விருத்திசெய்யப்பட்டிருந்தது. அத்துடன் S&T நிறுவனங்களால் குறைந்தளவிலான காப்புரிமைகளே செய்யப்பட்டிருந்தது. இருந்தபோதும் கூடிய எண்ணிக்கையான ஆராய்ச்சி வெளியீடுகள் S&T நிறுவனங்களில் உள்ள விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அவற்றில் பெரும்பான்மையானவை ஆராய்ச்சி மாநாட்டின் முன்னிலைப்படுத்தல்களின் சுருக்கம் ஆகும். அத்துடன், இந்த நிறுவனங்களில் கூடிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஆராய்ச்சி சஞ்சிகைகளில் வெளியிடக்கூடிய உயர் தரத்திலுள்ள கூடுதலான ஆராய்ச்சிகளை செய்வது அவசியமாகும்.

தேசிய S&T நிறுவனங்கள் எங்களுடைய மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுதல் மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக உடனடியாகத் தேவைப்படும் தொழில்நுட்பங்களை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களை விருத்தி செய்வதில் கவனம் செலுத்தி ஆராய்ச்சிகளை செய்யவேண்டும்.

1994, 11ஆம் இலக்க S&T சட்டமூலத்தின் படி, NASTEC ஆனது இரண்டு ஆண்டிற்கு ஒருமுறை விஞ்ஞான, தொழில்நுட்பத்தில் இலங்கை மாநாட்டை இலங்கையின் S&T சட்டத்தினுடைய விபரங்கள் சம்மந்தமாக கலந்துரையாடலை மேற்கொள்வதற்கான மன்றத்தை கூட்டவேணடும். 2016 ஆம் ஆண்டில் 8வது S&T மாநாட்டடை NASTEC கூட்டியது. இந்த மாநாட்டின் பிரதம விருந்தினர் விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் அமைச்சர் மதிப்புக்குரிய சுசில் பிறேமஜயந்த ஆவார். இந்த மாநாட்டில் தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கட்டமைப்பிற்கான செயலாக்கல் மூலோபாயம் ஒன்றை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது. 100இற்கும் மேலான இலங்கையிலுள்ள முன்னிலையிலுள்ள விஞ்ஞானிகள் செயலாக்கல் மூலோபாயத்தை மேம்படுத்துவதில் பங்கெடுத்தனர். இந்த செயலாக்கல் மூலோபாயம் 2017 ஆம் ஆணடில் பூரணமாக்கப்படும்.

2016 ஆம் ஆண்டில், NASTEC இன்னுமொரு முக்கியமான தேசியகொள்கையான “தேசிய கனியவள கொள்கை” யை விருத்தி செய்யும் பணியை ஆரம்பித்தது. கனியவளங்கள் சார்ந்த துறையில் உள்ள முன்னிலை நிபுணா்கள் இந்த கொள்கையை விருத்தி செய்வதில் பங்கெடுத்தனர். இந்த தேசிய கொள்கை 2017 ஆம் ஆண்டில் பூரணவடிவம் பெறும்.

1994 S&T சட்டமூலத்தின் படி, NASTEC ஆனது தேசிய S&T நிறுவனங்களின் முன்னேற்றங்களை அச்சட்டத்தின் உள்ளடக்கம் தொடர்பாக மீளாய்வு செய்யும்படி வேண்டப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் NASTEC இனால் இரண்டு தேசிய S&T நிறுவனங்களின் செயற்றிறன் மீளாய்வு செய்யப்பட்டது. அவையாவன: களப்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் மற்றும் பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம். இந்த மீளாய்வானது துறைசார்ந்த நிபுணா்களைக் கொண்ட மீளாய்வு குழுவால் நடாத்தப்பட்டது.

தரத்தை மதிப்பிடுதல், செலவு செயற்றிறன், அத்துடன் தேசத்தின் எதிர்பார்ப்பு மற்றும் தேவைகளை நிறுவனங்களில் நிறைவேற்றுதலுக்காக இந்த நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகளினுடைய இணக்கம் மற்றும் தேவைகளை நிறுவனங்களால் நிறைவேற்றுவதற்காக இந்த நிறுவனங்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகளினுடைய இணக்கம் மற்றும் அவற்றின் விளைவை உறுதிப்படுத்தல் இம்மீளாய்வின் குறிக்கோளாக இருந்தது.

“இயற்கை நிகழ்வுகள் காரணமான இயற்கை அனர்த்தங்களை குறைத்தல்:கொள்கையிலிருந்து செயல்முறை” என்ற தலைப்பில் சர்வதேச கருத்தரங்கை 2016 இல் நடாத்தியது NASTEC இன் இன்னொரு பிரதான செயற்பாடு ஆகும். 18 வெளிநாடுகளில் இருந்து பிரதிநிதிகளும் இலங்கையும் இந்த கருத்தரங்கில் பங்குபற்றனர். இதன் வெளியீடாக அனர்த்தங்களைக் குறைத்தல் மற்றும் கடும் இயற்கை நிகழ்வுகள் காரணமான ஆபத்துகள் மீதான கொழும்பின் தீர்மானம் இருந்தது. இந்த கருத்தரங்கு அணிசேரா விஞ்ஞான, தொழில்நுட்பத்திற்கான மையம் (NAM S&T) மற்றும் வேறு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுடன் இணைந்து ஒழுங்குபடுத்தபடுத்தப்பட்டது. இலங்கையினுடைய NAM S&T மையத்தினுடைய இலங்கையின் தேசிய மையப்புள்ளியாக இருக்கும் NASTEC ஆனது இலங்கையின் விஞ்ஞானிகளிற்கும் விஞ்ஞான நிர்வாகிகளிற்கும் (NAM S&T) இன் ஊடாக பல்வேறுபட்ட பயிற்சிகளை வழங்கும் சந்தர்ப்பங்களை வழங்குவதில் இணைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், NASTEC ஆனது S&T நிறுவனங்களின் மேம்பாட்டிற்காகவும் இலங்கையின் விஞ்ஞானிகளிற்காகவும் வேறு பல செயற்பாடுகளையும் நடாத்தியிருந்தது. ஆராய்ச்சி திட்டங்களை முன்மொழிதல் மதிப்பாய்வுரை செய்தல் மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகளை தொகுத்து அமைத்தல் சார்ந்த கருத்தரங்கு, அடிப்படை புள்ளிவிபரவியலில் ஒரு குறும்பாடம் ஆகியவை இவற்றில் உள்ளடங்கும்.

NASTEC இனுடைய இளைய விஞ்ஞானிகள் மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 5$^{வது}$ தொடர்ச்சியான ஆண்டிற்கான தேசிய கருத்தரங்கானது, இளைய விஞ்ஞானிகளுக்கு அவர்களுடைய ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பை இலங்கையின் விஞ்ஞான தொழில்நுட்ப சமூகத்திற்கு முன்னிலைப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தது. இலங்கையின் விஞ்ஞான, தொழில்நுட்பதுறையில் மனிதவள அபிவிருத்திக்காக NASTEC மூலம் முன்னெடுக்கப்பட்ட மற்றுமொரு S&T செயற்பாடு இதுவாகும்.

2017 ஆண்டில், NRDF இனுடைய செயலாக்கல் மூலோபாயத்திற்கு பூரணமாக்கல், தேசிய கனியவள கொள்கையை பூரணப்படுத்தல், திறனை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை எடுக்க அரசாங்கத்திற்கு பரிந்துரைத்தல் மற்றும் S&T இன் பொருளாதார அபிவிருத்தி மற்றும் இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான ஆக்க அளவு உள்ளடங்கலான ஆண்டு திட்டத்தில் இனங்காணப்பட்ட சகல செயற்பாடுகளையும் செய்வதற்கு NASTEC திட்டமிட்டுள்ளது.

விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சிக்கான அமைச்சின் அமைச்சர் மதிப்பிற்குரிய சுசில் பிரேமஜயந்த அவர்கள் NASTEC இன் சகல செயற்பாடுகளிற்கும் வழங்கிய அவரது உதவிகளிற்கும் மனமார்ந்த நன்றிகளை நான் தெரிவிக்கிறேன். அவருடைய ஊக்குவித்தலும் ஒத்துழைப்பும் கடந்த வருடத்தில் NASTEC இற்கு அதன் இலக்கை அடைவதற்கு உதவியது. அத்துடன் நான் MoSTR செயலாளர் மற்றும் அதிகாரிகளிற்கு அவர்களுடைய ஆதரவிற்கும் ஒத்துழைப்பிற்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். NASTEC இனுடைய இயக்குனர்/ பிரதம கொள்கை நிறைவேற்று அதிகாரி மற்றும் உத்தியோகஸ்தர்களிற்கு 2016 ஆம் ஆண்டிற்கான செயற்பாடுகளை வெற்றிகரமாக நடாத்திமைக்கு நான் இச்சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிரேஷ்ட பேராசிரியர்,
எம்.ஜே.எஸ்.விஜயரத்ன,
தலைவர்,
தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு.

# ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

## 20 சித்திரை 2016 வரை



**பேராசிரியர்.டீ.ஏ.தந்திரிகொட**

**தலைவர்**

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பௌதிகவியல் பீடத்தின் தலைவர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகத்தின் தொழில்நுட்ப ஆலோசகர், உயர்கல்வி அமைச்சின் கொள்கை மற்றும் மூலோபாய பிரிவின் முதன்மை ஆலோசகர், இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தின் பொதுத்தலைவர், எடின்பர்க் பல்கலைக்கழகத்தின் வருகை ஆராய்ச்சி நிபுணர்.



**பேராசிரியர்.ஆர்.ரீ.குமாரணதுங்க**

றுகுணு பல்கலைக் கழகத்தின் கடற்றொழில் உயிரியல் பிரிவின் தலைவர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர்

**வகித்துள்ள வேறு பதவிகள்**

கடற்றொழில் மற்றும் சமுத்திரவியல், தொழில்நுட்ப பீடத்தின் ஸ்தாபகர்/பீடாதிபதி, றுகுணு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் சமுத்திர உயிரியல் பிரிவின் தலைவர். இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தின் பொதுத் தலைவர், தேசிய கடற்றொழில், கப்பற்துறை பொறியியல் நிறுவனம் மற்றும் தேசிய அறிவியல் அறக்கட்டளையின் முகாமைத்துவ சபை உறுப்பினர்



**பேராசிரியர்.ஏ.ஏ.பீ.எஸ்.மனம்பேரி**

களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின் அணு மருத்துவப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர், டேர்டன்ஸ் வைத்தியசாலை அணு உயிரியலாளர், ஆலோசகர், ஆலோசக தொழில்நுட்ப மதிப்பீட்டாளர், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதரச் சபையின் மதியுரை தொழில்நுட்ப மதிப்பீட்டாளர்



**கலாநிதி.எஸ்.எஸ்.நமசிவாயம்**

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் சிரேஷ்டவிரிவுரையாளர்

**வகித்துள்ள வேறுபதவிகள்**

இந்திய பட்டய நிதிப் பகுப்பாளர் நிறுவனத்தின் (ICFAI) எடியுகேஷன் லங்காவின் பீடாதிபதி, நவீன தொழில்நுட்பத்துக்கான ஆதர்.சீ.கிளார்க் நிறுவகத்தின் பணிப்பாளர்/CEO, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் மின் தொழில்நுட்பவியல் பிரிவின் தலைவர்



**பேராசிரியர்.நாரத வர்ணசூரிய**

கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் குழந்தை மருத்துவவியலின் சிரேஷ்ட பேராசிரியர்

**வகித்துள்ள வேறுபதவிகள்**

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், குழந்தை மருத்துவவியலின் சிரேஷ்ட பேராசிரியர்; இலங்கை துணைவேந்தர்கள், பணிப்பாளர்கள் குழுவின் தலைவர்; றோயல் குவென்ட், ருமு குழந்தை மருத்துவவியலின் ஆலோசகர்



**கலாநிதி.ஜே.வத்தவிதான**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விலங்கியல் சிரேஷ்ட விரிவரையாளர்

**வகித்துள்ள வேறு பதவிகள்**

இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தின் பொதுச்செயலாளர், தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகள் அமைச்சின் புடவைகள் உற்பத்தி வர்த்தகப் பிரிவின் சம்பளக் கட்டுப்பாட்டுச் சபை அங்கத்தவர், தேசிய கடற்றொழில் மற்றும் கப்பற்றுறை பொறியியல் நிறுவகத்தின் (சமுத்திர பல்கலைக்கழகம்) நிருவாகச்சபை அங்கத்தவர்



**கலாநிதி.எ.எம்.முபாரக்**

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி

**வகித்துள்ள வேறு பதவிகள்**

SAARC இன் இலங்கைப் பிரதிநிதி, S&T இன் துணை ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்பாளர், இலங்கை இந்திய கூட்டுக்குழு, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட ஆலோசனை நிபுணர் குழுவின் அங்கத்தவர்

## 30 ஆனி 2016 முதல்



**பேராசிரியர்.எம்.ஜே.எஸ்.விஜயரத்ன – தலைவர்**

களனிப்பல்கலைக்கழகத்தின் விலங்கியல்துறையின் சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் தலைவர்

**வகித்துள்ள வேறு பதவிகள்**

களனிப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி; இலங்கையின் துணைவேந்தர், பணிப்பாளர் குழுவின் தலைவர்; முதுகலைப் பட்டப்படிப்பு நிறுவகத்தின் முகாமைத்துவ சபைத்தலைவர், இலங்கை தர நிர்ணய நிறுவகத்தின் ஆளுகைசபை, ஆதர்.சி.கிளாக். நவீன தொழில்நுட்ப நிறுவகம், தேசிய கடற்றொழில் மற்றும் கப்பற்துறை பொறியியல் நிறுவனம், தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சபை, தேசிய அறிவியல் அறக்கட்டளை, அடிப்படை கற்கைகளுக்கான தேசிய நிறுவகம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் வடமேல்மாகாண சுற்றாடல் சபை இனுடைய அங்கத்தவர்.



**பேராசிரியர்.ஆர்.ரீ.குமாரணதுங்க**

றுகுணு பல்கலைக் கழகத்தின் கடற்றொழில் உயிரியல் பிரிவின் தலைவர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர்

**வகித்துள்ள வேறு பதவிகள்**

கடற்றொழில் மற்றும் சமுத்திரவியல், தொழில்நுட்ப பீடத்தின் ஸ்தாபகர்/பீடாதிபதி, றுகுணு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் சமுத்திர உயிரியல் பிரிவின் தலைவர். இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தின் பொதுத் தலைவர், தேசிய கடற்றொழில், கப்பற்துறை பொறியியல் நிறுவனம் மற்றும் தேசிய அறிவியல் அறக்கட்டளையின் முகாமைத்துவ சபை உறுப்பினர்



**பேராசிரியர். டபிள்யு. எல்.சுமதிபால**

சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர் மற்றும் அணைப் பாதுகாப்பு திட்டத்தின் ஆலோசகர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

**வகித்துள்ள வேறு பதவிகள்**

இலங்கை தேசிய அறிவியல் அறக்கட்டளைத் தலைவர், இலங்கை திறந்த பல்கலைக்கழக பௌதிகவியல் பேராசிரியர், காலநிலை மாற்றப்பிரிவு நிறுவனர், பணிப்பாளர்; சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சின் காலநிலை மாற்றத்திற்கான தலைமைப்பேச்சாளர், காலநிலை மாற்றத்திற்கான ஐ.நா கட்டமைப்பு ஒப்பந்ததின் தழுவல் நிதி வாரிய உறுப்பினர்; சுற்றுச் சூழல் அமைச்சகத்தின் காலநிலை மாற்றங்களைக் கட்டுப்படுத்தும் நிபுணர்களின் குழுத் தலைவர்; சுற்றுச் சூழல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் காலநிலை மாற்றத்திற்கான இசைவாக்கம் நிபுணர் குழுவின் உறுப்பினர்; காலநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கட்சிகளின் மாநாட்டிற்கு இலங்கை பிரதிநிதிகளின் பிரதான பேச்சாளர் மற்றும் சிரேஷ்ட உறுப்பினர்; சுற்றுச் சூழல் அமைச்சகத்தின் மொன்றியல் புரொட்டக்கோல் பிரிவின் தேசிய ஒருங்கிணைப்பாளர்/ பணிப்பாளர், மொன்றியல் புரொட்டக்கோலின் கட்சிகள் மற்றும் பிராந்திய ODS அலுவலர்கள் சந்திப்புகளின் திறந்த முடிவுற்ற பணிக்குழுவின் சந்திப்புக்கு இலங்கை பிரதிநிதிகளின் தலைவர் மொன்றியல் நெறிமுறையின் செயல்பாட்டுக்குழு, மொன்றியல் நெறிமுறையின் பன்முக நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்



**பேராசிரியர்.டி.என்.கருணாரத்ன**

சிரேஷ்ட பேராசிரியர், இரசாயனவியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

**வகித்துள்ள வேறு பதவிகள்**

கனடாவின் குயெல்.ஃப் பல்கலைக்கழகத்தின் வருகைதரு பேராசிரியர்; கனடாவிலுள்ள வாட்டர்லு பல்கலைக்கழகத்தின் வருகைதரு விஞ்ஞானி; அமெரிக்காவின் கேன்ஸ் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மாணவர், தாய்லாந்து பல்கலைக்கழகம், மஹிடோல் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞான அறிஞர்



**பேராசிரியர் குணபால நாணயக்கார**

கல்வி அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் வேதிய ஊதியம் மற்றும் கட்டமைப்பை ஆணையத்தின் உறுப்பினர்

**வகித்துள்ள வேறு பதவிகள்**

தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம், கல்வி அமைச்சு; ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர்; இலங்கை முகாமைத்துவ கூட்டுறவு தலைவர்; இலங்கையின் வர்த்தக வங்கியின் கீழ் சசெக்ஸ் கல்லூரி நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி; இலங்கை நிர்வாக சீர்திருத்தக்குழுவின் உறுப்பினர்; தெற்காசியாவின் முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனங்களின் சங்கத்தின் துணைத்தலைவர் (AMDISA); இலங்கை தேசிய கல்வி நிறுவக கவுன்சிலிங் கழக உறுப்பினர், இலங்கை அறக்கட்டளை நிறுவனம், தொழில்நுட்ப கல்வியின் தேசிய நிறுவனம் மற்றும் இலங்கையின் வர்த்தக முகாமைத்துவ தேசிய நிறுவனத்தின் அங்கத்தவர்



**பேராசிரியர் டபிள்யு.எ.ஜே.எம்.டீ கொஸ்தா**

சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் பயிர் அறிவியலின் தலைவர், பேராதனைப் பல்கலைக்கழகம்; இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையின் உறுப்பினர்



**பேராசிரியர் அர்ஜீனா பி.டி.சில்வா**

இலங்கை ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனத்தின் தலைவர் (SLADA); மருத்துவ திணைக்களம், களனிப் பல்கலைக்கழகம்; கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் ஆலோசகர் மருத்துவர்; இரைப்பை குடலியல் ஆய்வுக் கல்வியின் குழுத்தலைவர்; விளையாட்டு மருத்துவம் படிப்பு குழு உறுப்பினர்; மருத்துவ படிப்பு சபை உறுப்பினர்; தேசிய கல்வி நிறுவனம்; இரைப்பை குடலியல் பயிற்றுவிப்பாளர்; உலக இரைப்பை குடலியல் சார் சஞ்சிகையின் இணை எழுத்தாசிரியர்; இலங்கையின் தேசிய விளையாட்டு சபை உறுப்பினர்

# நிறுவனத்தின் விபரத்திரட்டு

- தலைவர் ஆணைக்குழுவுக்கு தலைமை வகிக்கின்றார்

- பணிப்பாளர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராவார்.


- கொள்கைகள், திட்ட அறிக்கைகள் மற்றும் ஏனைய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த ஆவணங்களைத் தயாரிக்கின்ற ஆய்வுக் குழுக்கள் மற்றும் ஆலோசனைச் சபைகளுக்கான வசதியேற்பாடுகளையும் முகாமைத்துவத்தையும் சிரேஷ்ட விஞ்ஞானிகள் மேற்கொள்கின்றனர்.

- நிறைவேற்றுச் செயலாளர் ஆணைக்குழுவின் செயலாளராவார் அத்துடன் அலுவலக முகாமையாளராகவும் செயலாற்றுகின்றார்.

- பிரதிப் பணிப்பாளர் , நிதி மற்றும் நிர்வாகம் சகல நிதி விடயங்களினதும் முகாமைத்துவத்தை மேற்கொள்கின்றார்.

- ஆணைக்குழுவின் தேவைப்பாட்டைப்பொறுத்து விசேட கருமங்கள் மற்றும் ஒப்படைகளுக்காக ஆலோசகர்கள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்கள் ஆட்சேர்க்கப்படுகின்றனர்.

# நிறுவனக் கட்டமைப்பு



# விஞ்ஞான, தொழில்நுட்ப மீளாய்வுகள்

இலங்கையின் விஞ்ஞான தொழில்நுட்ப செயற்பாடுகளை மீளாய்வு செய்து தொடர்ச்சியான வருடங்களில் அரசாங்கத்திற்கு வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு NASTEC ஐ வேண்டப்பட்டுள்ளது. நாட்டினுடைய S&T நிலையை வருடாந்தம் மீளாய்வு செய்தல் S&T துறையின் கொள்கை உருவாக்கல் மற்றும் தீர்மானம் எடுத்தலுக்கு தேவையான ஒன்றாகும்.

2016 ஆம் ஆண்டில் நாட்டின் 37 S&T நிறுவனங்களில் 2015 ஆம் ஆண்டிற்கான தகவலை திரட்டுவதற்காக NASTEC இனால் வினாக்கொத்து ஆய்வொன்று நடாத்தப்பட்டது. பெற்ற தகவல்களின் அடிப்படையில் "இலங்கையின் விஞ்ஞான தொழில்நுட்ப நிலை- 2015" என்ற அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இந்த அறிக்கை கீழ்வரும் பிரதான பகுதிகளை உள்ளடக்கியுள்ளது

1. S&T நிறுவனங்களின் மனித பௌதிக வளங்கள்
2. S&T இல் பொது செலவினத்தின் திறன்
3. S&T நிறுவனங்களின் செயல்திறன்
4. படித்த சமூகங்களின் S&T செயற்பாடுகள்

திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில், நாட்டின் S&T துறையின் அபிவிருத்திக்காக பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

# விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் மீளாய்வுகள்

## S&T நிறுவனங்களின் மீளாய்வு

1994 , இல-11, விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின்படி NASTEC இற்கு இலங்கையின் S&T நிறுவனங்களின் செயல்திறன் மீளாய்வை மேற்கொள்ளமாறு வேண்டப்பட்டுள்ளது. 2011 இலிருந்து 2015 வரை 14 நிறுவனங்களின் மீளாய்வு NASTEC இனால் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது. அதற்கான தரவுகள் கீழ் தரப்பட்டுள்ளன.

| நிறுவனம் | முடிக்கப்பட்ட திகதி |
|---|---|
| SLAB – 1வது மீளாய்வு | 2011/வைகாசி |
| SLAB – 2வது மீளாய்வு | 2015/மாசி |
| AEA - 1வது மீளாய்வு | 2011/கார்த்திகை |
| AEA - 2வது மீளாய்வு | 2015/சித்திரை |

| | |
|---|---|
| NBRO | 2013/மாசி |
| வளிமண்டலவியல் திணைக்களம் | 2012/மார்கழி |
| IFS | 2013/ஐப்பசி |
| NERDC | 2014/பங்குனி |
| ITI | 2014/ சித்திரை |
| NSF | 2014/ சித்திரை |
| SLSI | 2015/வைகாசி |
| NRC | 2015/மாசி |
| ACCIMT | 2013/ஆனி |

## களப்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தின் மீளாய்வு (FCRDI)

2016 ஆம் ஆண்டில் NASTEC இனால் FCRDI இனுடைய செயல்திறன் மீளாய்வு செய்யப்பட்டது. நிறுவனத்தின் வளர்ச்சியையும் அத்தடன் தரத்தை மதிப்பிடுதல், செலவு செயற்றிறன், அத்துடன் தேசம் மற்றும் வேறு பங்குதாரிகளின் எதிர்பார்ப்பு மற்றும் தேவைகளை நிறுவனங்களில் நிறைவேற்றுதலுக்காக இந்த நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகளினுடைய இணக்கம் மற்றும் தேவைகளை நிறுவனங்களால் நிறைவேற்றுவதற்காக இந்த நிறுவனங்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகளினுடைய இணக்கம் மற்றும் அவற்றின் விளைவை உறுதிப்படுத்தல் இம்மீளாய்வின் குறிக்கோளாக இருந்தது.

கீழ் உள்ள மீளாய்வுக் குழுவினால் மீளாய்வு நடாத்தப்பட்டது.

1. பேராசிரியர் டபிள்யு. ஏ. ஜே. டி. கோஸ்தா, சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் பயிர் அறிவியல் தலைவர், விவசாய பீடம், பேராதனை பல்கலைக்கழகம் (குழுவின் தலைவர்)

2. கலாநிதி. விஜய ஜயதிலக, ஓய்வுபெற்ற பேராசிரியர், விவசாய பீடம், பேராதனை பல்கலைக்கழகம்

3. கலாநிதி. எவரட் ஜெயமன்னே, தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் முன்னாள் துணைப் பணிப்பாளர்

4. கலாநிதி. கீர்த்தி மொஹோதி, துணைப் பணிப்பாளர் (ஆராய்ச்சி), தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்

5. கலாநிதி. ரேணுகா சில்வா, சிரேஷ்ட விரிவுரையாளர், கால்நடைகள், மீன்வளர்ப்பு மற்றும் ஊட்டச்சத்து பீடம், வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை

FCDRI அதன் சுயமதிப்பீட்டு அறிக்கையை 09 ஆனி 2016 அன்று NASTEC இற்கு சமர்ப்பித்தது. மீளாய்வுக்குழுவின் முதலாவது கூட்டம் 09 ஆனி 2016 இல் மகாஇலுப்பல்லாம சேவை பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. அத்துடன மீளாய்வுத் திட்டமானது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் குழு 2016 ஆடி 4,5,11,12 ஆம் திகதிகளில் மீளாய்விற்காக FCDRI இற்கு விஜயம் செய்திருந்தது. 2016 ஆனி 15, 16 ஆம் திகதிகளில் முறையே கிளிநொச்சி மற்றும் அறலகன்வில இலுள்ள FCDRI

உபநிலையங்களுக்கு விஜயம் செய்திருந்தது. அத்துடன் 19, 20 ஆம் திகதி புரட்டாதி 2016 இல் அகுனகொலபெல்லெஸ்ஸ உபநிலையத்திற்கும் சென்றிருந்தது.
இந்தக் குழுவானது இந்நிலையங்களின் முகாமைத்துவம் சார் தகவல்களை திரட்டுவதற்காக பணிப்பாளர்சபையை சந்தித்திருத்திருந்தது. இந்தக்குழு FCDRI இன் பங்குதாரர்களுடன் 29 ஆவணி 2016 இல் மகாஇலுப்பல்லாமவிலும் 31 ஆவணி 2016 இல் ஹெக்ரர்கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் கலந்துரையாடலை மேற்கொண்டது. மீளாய்வுக் குழு 05, 17 மற்றும் 20 ஐப்பசிஇ 2016 இலும் சந்தித்திருந்தது. NASTEC, அறிக்கையின் முதலாவது வரைவுக்காக காத்திருக்கிறது.

## பழ ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (FRDI)


NASTEC இனால் ஆய்வு செய்யப்பட்ட 2வது நிறுவனம் FRDI ஆகும். நிலையத்தின் சுயமதிப்பீட்டு அறிக்கையை பெற்ற பிறகு, கீழுள்ள அங்கத்தவர்களை உள்ளடக்கிய மீளாய்வுக்குழு NASTEC இனால் நியமிக்கப்பட்டது.

- பேராசிரியர்.எஸ்.சுபசிங்க, பேராசிரியர், விவசாய பீடம், ருகுண பல்கலைக்கழகம்
- பேராசிரியர்.லலீன் கருணாநாயக்க, பேராசிரியர், பிரயோக விஞ்ஞானபீடம், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
- கலாநிதி.நிமல் திசநாயக்க, முன்னாள் பணிப்பாளர், நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
- கலாநிதி.வாசன விஜயசூரியஇ சிரேஷ்ட விஞ்ஞானி, இறப்பர் ஆராய்ச்சி நிலையம்

மீளாய்வுக் குழுவின் முதலாவது கூட்டம் 4 ஆடி 2016 இல் இடம்பெற்றது. இந்தக்குழு FRDI இற்கு 18, 19 ஆவணி 2016 இல் விஜயம் செய்திருந்தது. பேராதனையிலுள்ள உபநிலையத்திற்கும் 14 புரட்டாதி 2016 இல் இந்தக்குழு விஜயம் செய்திருந்தது. பங்குதாரர் சந்திப்பு 21 ஐப்பசி 2016 இல் நடைபெற்றது. மீளாய்வு அறிக்கையின் 1வது வரைவு NASTEC இற்கு 22 மார்கழி 2016 இல் சமர்ப்பிக்கப்பட்டது.

## தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக்கான கட்டமைப்பு, மேதகு ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

NASTEC இனால் தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக்கான கட்டமைப்பானது இலங்கை சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி உயர்திரு மேதகு மைத்திரிபால ஸ்ரீசேனவிற்கு, 3 வைகாசி 2016 இல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற விஷேட சந்திப்பில் சமர்ப்பிக்கப்பட்டது.




இந்தக் கட்டமைப்பில் விஞ்ஞான சமூகத்தினால் உடனடியாக கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ள அழுத்தமுள்ள பிரச்சனைகளுடன் கூடிய 10 கவனத்திற்கான பகுதிகள் இனங்காணப்பட்டுள்ளன. ஆவையாவன 1- நீர் 2- உணவு, ஊட்டமும் விவசாயமும் 3- சுகாதாரம் 4-புகலிடம் 5- சுற்றுச்சூழல் 6- சக்தி 7- கனியவளங்கள் 8-துணி மற்றும் ஆடை 9- ICT மற்றும் அறிவுசார் சேவைகள் 10- அடிப்படை விஞ்ஞானம், வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் மற்றும் உள்ளூர் அறிவு.

ஓவ்வொரு பகுதிகளிலும் விஷேட பிரச்சனைகள் மற்றும் ஆராய்ச்சி, அபிவிருத்தித் தேவைகள் இனங்காணப்பட்டுள்ளது. இப்பிரச்சனைகளிலிருந்து மீள்வதற்காக 600 இற்கும் அதிகமான தலையீடுகள் முன்மொழியப்பட்டுள்ளன. அத்துடன் அவை கீழ்வரும் 10 பிரதான பிரிவுகளின் கீழ் நிரற்படுத்தப்பட்டள்ளது. 1- கொள்கை உருவாக்கம் 2- தூய, பிரயோக ஆராய்ச்சிகள் 3- உயிரியல் தொழில்நுட்பம் 4- நனோ தொழில்நுட்பம் 5- புத்தாக்கங்களின் ஊக்குவிப்பு 6- உள்ளூர் அறிவியலின் பிரயோகித்தல், 7- தரநிலைப்படுத்தல், அங்கீகாரம் மற்றும் IPR 8- திறனைக் கட்டியமைத்தல் 9- ICT பிரயோகம் மற்றும் 10-பிரபலப்படுத்தல்.

NRDF ஆனது S&T சமூகத்திற்கும் அது சார்ந்த பங்குதாரர்களுக்கும் அவர்களுடைய ஆராய்ச்சி மற்றும் வேறு தொடர்புடைய நடவடிக்கைகளினை திட்டமிடுவதற்கும் பங்களிப்பை வழங்குவதே NRDF இன் இறுதி இலக்கு ஆகும். அது S&T நிறுவனங்களிற்கும் விநியோகிக்கப்பட்டதுடன் NASTEC வலைத்தளத்திலும் பெறக்கூடியதாக உள்ளது. (www.nastec.lk).




**பேராசிரியர்.தம்பிக்க தந்திரிகொட, முன்னாள் தலைவர், NASTEC, NRDF ஐ மேதகு ஜனாதிபதிக்கு வழங்கினார்**

## 8வது இலங்கை விஞ்ஞான, தொழில்நுட்ப மாநாடு (BICOST VIII)

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு ஈராண்டுகளுக்கு ஒரு தடவை இலங்கை விஞ்ஞான, தொழில்நுட்ப மாநாட்டை நடத்துகின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒன்றியம் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு விஞ்ஞானம், மற்றும் தொழில்நுட்பம் பற்றிய விடயங்கள் தொடர்பில் தேசத்தின் சமூக-பொருளாதார அபிவிருத்தியை ஈடேற்றிக் கொள்வதில் அவற்றின் பிரயோகம் பற்றி விஞ்ஞானிகளின், தொழில்நுட்பவியலாளர்களின், கைத்தொழிலாளர்களின், நிர்வாகிகளின் மற்றும் வேறு தரப்பினர்களின் ஆலோசனையை பெற்றுக்கொள்கின்ற வழியை உருவாக்கும்

இந்த 8வது இலங்கை விஞ்ஞான, தொழில்நுட்ப மாநாடு 24 மற்றும் 25 ஆம் திகதி கார்த்திகை 2016 இல், ஹேற்வே ஹொட்டலில் (Airport Garden), கட்டுநாயக்கவில் நடைபெற்றது.

தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கட்டமைப்பை செயலாக்கல் உபாயங்களை உருவாக்குவதே இந்த மாநாட்டின் நோக்கமாக இருந்தது.

விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், தனியார்துறை பங்குதாரர்கள் மற்றும் அரசாங்க, திணைக்கள, நிறுவன பிரதிநிதிகள் உட்பட 114 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்குபற்றியிருந்தனர்.



**BICOST-VIII இன் சில சிறப்பம்சங்கள்**

## சர்வதேச கருத்தரங்கு- " கடுமையான இயற்கை நிகழ்வுகள் காரணமாக வரும் அனர்த்தங்களை குறைத்தல்; கொள்கையிலிருந்து நடைமுறைப் பயிற்சி"

NASTEC, அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துக்கான நிலையத்துடன் (NAM S&T Centre) இணைந்து இந்த கருத்தரங்கை ஒழுங்குசெய்தது. இந்த நிகழ்வானது 10 மற்றும் 13 பங்குனி 2016 இல் நடைபெற்றது.

18 நாடுகளிலிருந்து (கம்போடியா, எகிப்து, ஹங்கேரி, இந்தியா, இந்தோனேசியா, ஈரான், மலேசியா, மொரிசியஸ், மியன்மார், நேபாளம், நைஜீரியா, பாகிஸ்தான், பாலஸ்தீன், தாய்லாந்து, உகண்டா, வெனிசூலா, சாம்பியா, சிம்பாவே) 24 வெளிநாட்டு பங்கேற்பாளரும் 35 உள்நாட்டு பங்கேற்பாளர்களும் இதில் கலந்து கொண்டனர்.

கடுமையான இயற்கை அனர்த்தங்கள் காரணமான ஆபத்துக்களை குறைப்பதற்கான மூலோபாய தலையீடுகளை உருவாக்குவதற்கு அது தொடர்புடைய நிபுணர்களுடன் NAM மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பங்குதாரர்களை ஒன்றாக கொண்டுவருவதே இந்தக்கருத்தரங்கின் குறிக்கோளாகும்.

கருத்தரங்கின் பிரதான வெளிப்பாடு கடுமையான இயற்கை நிகழ்வுகள் காரணமான ஆபத்துக்களைக் குறைப்பதற்கான பயிற்சி நடைமுறைக்கான வழிகாட்டல்களின் கொழும்பின் தீர்மானம் ஆகும்.




**கருத்தரங்கின் சில சிறப்பம்சங்கள்**

# சர்வதேச உறவுகள்

## அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான, தொழில்நுட்பத்துக்கான நிலையம் (NAM S&T Centre)

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான, தொழில்நுட்பத்துக்கான நிலையம் (NAM S&T Centre) 1989 ஆம் ஆண்டில் பல்வேறு அணிசேரா நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடுகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்துவதற்கான சர்வதேச அரசாங்க அமைப்பாக நிறுவப்பட்டது. 44 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அரச திணைக்கள, அமைச்சுகளின் பிரதிநிதிகள் மற்றும் விஞ்ஞான, தொழில்நுட்ப சார் நிறுவனங்களும் இந்த நிலையத்தின் அங்கத்தவர்களாக இணைந்தனர். NASTEC ஆனது NAM S&T நிலையத்திற்கான இலங்கையின் மையப்புள்ளியாகும்.

NAM S&T மையமானது விஞ்ஞானிகளிற்கும் வேறு அலுவலர்களிற்கும் அங்கத்துவ நாடுகளால் ஒழுங்குசெய்யப்படுகின்ற கருத்தரங்குகள், மாநாடுகள், மற்றும் குறுகியகால நீண்டகால பயிற்சி திட்டங்களில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. பங்குபற்றுனர்களிற்கான விமானசெலவை இந்நிலையமும் தங்குமிடவசதியை ஒழுங்கமைக்கும் நாடும் வழங்குகின்றது.

**<u>2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த நிலையத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட செயற்பாடுகள்</u>**

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த நிலையத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட செயற்பாடுகளில் பங்குபற்றிய இலங்கையின் விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்கள்.

1- விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சிக்கான அமைச்சின் செயலாளர் திருமதி.ஆர்.விஜயலக்ஷ்மி அவர்கள் 2016 வைகாசி 23ம் திகதி தொடக்கம் 26 ம் திகதி வரை ஈரானில் நடைபெற்ற தொழில்நுட்பங்களின் வர்த்தகமயமாக்கல் எனும் சர்வதேச பயிற்சி கருத்தரங்கில் இலங்கை சார்பான பிரதிநிதியாக கலந்துகொண்டார்.
2- NASTEC இன் பணிப்பாளர், பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி.முடித லியனாகெதற 8-12 ஆம் திகதி ஆவணி 2016 இல் மலேசியாவில் இடம்பெற்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிற்கான STI கொள்கை மற்றும் முகாமைத்துவதற்கான சர்வதேச பயிற்சி திட்டத்தில் இலங்கைக்கான பிரதிநிதியாக கலந்துகொண்டார்.
3- தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் திரு.டபிள்யு.ஏ.எல்.எஸ்.கருணாவர்த்தன, 2016 மார்கழி 12ம் திகதி தொடக்கம் 14ம் திகதி வரை இந்தியாவில் இடம்பெற்ற வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் உருவாகும் சக்தி மாதிரிகளிற்கான சர்வதேச கருத்தரங்கில் பங்குபற்றினார்.

2016 ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் S&T நிறுவனங்களிற்கு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் விஞ்ஞானிகளிற்கு ஆராய்ச்சி பயிற்சி கூட்டுறவிற்கான அறிவித்தல் விநியோகிக்கப்பட்டது.

NAM S&T நிலையத்தினால்;மத்திய கடல்சார் ஆராய்ச்சிக்கான அறிவித்தல் ZMT-பிறீமன் விஞ்ஞானிகளிற்கிடையில் விநியோகிக்கப்பட்டது.

மார்கழி 2016 இல், DST (தென்ஆபிரிக்கா) இன் கனிமபதப்படுத்தல், கனிமதுாய்மித்தலிற்கான கூட்டுறவுப்பயிற்சி அறிவித்தல் S&T நிறுவனங்களிற்கு விநியோகிக்கப்பட்டது.

## ஆலோசனை மன்றங்களின் செயற்பாடுகள்

### இளைய விஞ்ஞானிகள் மன்றச் (YSF) செயற்பாடுகள்

### YSF வருடாந்த பொதுக்கூட்டம் – 2016

2016 ஆம் ஆண்டு தை மாதம் 22ம் திகதி 2016 ஆம் ஆண்டிற்கான YSF இன் வருடாந்த பொதுக்கூட்டம் கொழும்பு-07 இல் அமைந்துள்ள பொறியியலாளர் நிலையத்தில் இடம்பெற்றது.

AGM இல் கீழுள்ள அங்கத்தவர்கள் YSF இன் 2016 இற்கான வழிகாட்டும் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டார்கள்.

- திருமதி.லோகினி ஆதித்தன், சிரேஷ்ட விரிவுரையாளர், உயிர் இரசாயனவியல் திணைக்களம், மருத்தவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
- கலாநிதி.தர்சினி பண்டுப்பிரிய, சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர், இழையவளர்ப்புப் பிரிவு, தெங்கு ஆராய்ச்சி நிலையம்
- கலாநிதி.பிரதீபா பண்டாரநாயக்க, பணிப்பாளர், விவசாய உயிர்த்தொழில்நுட்ப நிலையம், விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
- கலாநிதி.அசித்த பண்டாரநாயக்க, சிரேஷ்ட விரிவுரையாளர், கணனி பொறியியல் பிரிவு, பொறியியல்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
- கலாநிதி.இந்திக்க ஹெரத், மண்ணியல் விஞ்ஞானி, மண் மற்றும் தாவர ஊட்டச்சத்துப்பிரிவு, தெங்கு ஆராய்ச்சி நிலையம்
- திரு.எச்.எம்.அகில ஜயசங்க ஹெரத், ICT நிலையம், வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை
- கலாநிதி.எச்.ஏ.எச்.சம்ப, சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர், பின்னைய அறுவடை தொழில்நுட்ப நிறுவனம்
- கலாநிதி.சுலந்த ஜயவர்த்தன, சிரேஷ்ட விரிவுரையாளர், பூமிவள பொறியியல் பிரிவு, பொறியியல் பீடம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம்
- கலாநிதி.உஷா ஹெற்றியாராய்ச்சி, சிரேஷ்ட விரிவுரையாளர், உயிர் இரசாயனவியல் பிரிவு, மருத்துவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
- கலாநிதி.எச்.எம்.கசுனி அகலங்க, விரிவுரையாளர், தென்னாசிய தொழில்நுட்ப மருத்துவ நிறுவனம் (SAITM)
- கலாநிதி.மெத்திகா விதானகே, ஆராய்ச்சியாளர் (இரசாயன மற்றும் சூழல் முறைமை மாதிரி), தேசிய அடிப்படைக் கல்விக்கான நிலையம்
- கலாநிதி.ஆர்.எம்.நிலாந்தி விஜயவர்த்தன, சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர், பின்னைய அறுவடைத்தொழில்நுட்ப நிறுவனம்
- திரு.எஸ்.வி.ரி.டி.ரவீந்திரசிங்க, ஆராய்ச்சி அலுவலர், மாணிக்கம் மற்றும் நகை ஆராய்ச்சி நிலையம்

## 5வது YSF ஆராய்ச்சி கருத்தரங்கு

58 விஞ்ஞானிகளின் பங்குபற்றலுடன் 5வது YSF கருத்தரங்கு 22 தை 2016 இல் கொழும்பில் அமைந்துள்ள பொறியியலாளர் நிறுவனத்தில் இடம்பெற்றது. சுருக்கங்களின் வேண்டுதலிற்கு பதிலாக NASTEC 36 சுருக்கங்களை YSF அங்கத்தவர்களிடமிருந்து பெற்றது. ஒவ்வொரு சுருக்கங்களும் இரு சிரேஷ்ட விஞ்ஞானிகளால் YSF இற்கு கௌரவ சேவையாக மதிப்பீடு செய்யப்பட்டது. அவர்களின் பரிந்துரையின் கீழ் 32 சுருக்கங்கள் ஒப்புதல் செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட சுருக்கங்கள் மன்ற நடவடிக்கைப்பதிப்பில் பிரசுரிக்கப்பட்டன. வாய்மொழி மூலமான சமர்ப்பணங்கள் கீழ்வரும் 5 கருப்பிரிவுகளில் நடாத்தப்பட்டது.

- விவசாய விஞ்ஞானம்
- உணவும் விஞ்ஞானமும் நுண்ணுயிரியலும்
- மருத்துவ, சுகாதார விஞ்ஞானம்
- சூழல், பௌதிக விஞ்ஞானம்
- பொருளாதாரமும் சமூக விஞ்ஞானமும்

சகல வாய்மூல சமர்ப்பணங்களும் அழைக்கப்பட்ட சிரேஷ்ட விஞ்ஞானிகளால் மதிப்பீடு செய்யப்பட்டு ஒவ்வொரு அமர்வின் சிறந்த தொகுப்பாளரிற்கும் தகுதி சான்றிதழ் வழங்கப்பட்டன.

## "ஆராய்ச்சிக் கட்டுரைகளின் மீளாய்வும் தொகுப்பும்; நாம் சரியான முறையில் செய்கின்றோமா?" என்பது பற்றிய செயலமர்வு

மேற்குறிப்பிட்ட செயலமர்வானது 28ம் திகதி சித்திரை 2016இல், கொழும்பிலுள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.

இலங்கை விஞ்ஞானிகளால் வெளியிடப்படும் ஆராய்ச்சி கட்டுரைகளின் தரத்தை கூட்டுவதே இந்த நிகழ்வில் ஆராய்ச்சி கட்டுரைகளை எழுதுகின்ற, தொகுக்கின்ற மற்றும் மீளாய்வு செய்கின்ற 45 ஆராய்ச்சியாளர்கள் வருகை தந்திருந்தனர்

கருத்தரங்கிற்கு கலந்துரையாடலிற்கு வந்திருந்தவர்களின் பெயர்கள் பின்வருமாறு

பேராசிரியர்.புத்தி மரம்பே
பணிப்பாளர், விவசாயப்பிரிவு,
விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

கலாநிதி.பிரதீபா பண்டாரநாயக்க,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விவசாய உயிர் தொழில்நுட்ப நிலையம்.
விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

கலாநிதி.அசித்த பண்டாரநாயக்க,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கணனி பொறியியல் பிரிவு,
பொறியியல்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

கலாநிதி.மெத்திகா விதானகே,
ஆராய்ச்சியாளர் (இரசாயன மற்றும் சூழல் முறைமை மாதிரி),
தேசிய அடிப்படைக் கல்விக்கான நிலையம்

## வெற்றிகரமான ஆராய்ச்சித் திட்டத்தை எழுதுதல் பற்றிய செயலமர்வு

30 புரட்டாதி 2016இல் பல்கலைக்கழக கல்வியாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சி அலுவலகர்களிற்காக மேலுள்ள செயலமர்வு NASTEC மற்றும் YSF இனால் கொழும்பு- 07 இலுள்ள இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் நடாத்தப்பட்டது. இந்த செயலமர்வில் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தில் இணைந்துள்ள 52 இளம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தில் உள்ள இளம் கல்வியலாளர்கள் சமூகமளித்திருந்தனர்

**செயலமர்வில் கலந்துரையாடலிற்கு வருகை தந்திருந்தவர்களின் பெயர் விபரம் கீழ்வருமாறு**

பேராசிரியர்.டபிள்யூ.ஏ.ஜே.எம்.டீ கொஸ்தா
பயிர் அறிவியல் சார் சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் தலைவர்,
விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

கலாநிதி.லலித் சூரியகொட,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பயிர் அறிவியல் பிரிவு,
விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராசிரியர்.என்.சலீம்,
பேராசிரியர்,
தாவரவியற் பிரிவு,
பிரயோக விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

பேராசிரியர்.சாகரிகா எக்கநாயக்க,
பேராசிரியர்,
உயிர் இரசாயனவியல் பிரிவு,
மருத்துவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

பேராசிரியர்.(திருமதி). அசோகா பத்திரத்ன,
சிரேஷ்ட பேராசிரியர்,
விலங்கியல் மற்றும் சூழல் முகாமைத்துவப் பிரிவு,
களனிப் பல்கலைக்கழகம்

## ஆராய்ச்சிக்களிற்கான அடிப்படை புள்ளிவிபரவியல்: கொள்கைகள் மற்றும் பயிற்சிகள் பற்றிய குறுகிய கற்கைநெறி

இலங்கை குளியாபிட்டியவிலுள்ள வயம்ப பல்கலைக்கழக ICT நிலையத்தில் 2016 ஆம் ஆண்டு ஆனி மாதம் 13, 14 ம் திகதிகளில் YSF மற்றும் NASTEC இனால் மேலுள்ள கற்கைநெறி ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த செயலமர்வில் இளம் கல்வியலாளர்கள், இறுதி வருட ஆராய்ச்சி மாணவர்கள், முதுகலை மாணவர்கள் மற்றும் R&D நிறுவனங்களில் இணைக்கப்பட்டிருக்கும் இளம் ஆராய்ச்சியாளர்கள் உட்பட 58 நபர்கள் பங்குபற்றியிருந்தனர்.

**செயலமர்வில் கலந்துரையாடலிற்கு வருகை தந்திருந்தவர்களின் பெயர் விபரம் கீழ்வருமாறு**

பேராசிரியர்.ஆர்.ஓ.தட்டில்
ஓய்வுபெற்ற பேராசிரியர்,
பயிரியல் விஞ்ஞான பிரிவு,
விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.

கலாநிதி.ஆர்.அபேநாயக்க,
தலைவர்/ சிரேஷ்ட விரிவுரையாளர்,
விவசாய வியாபார முகாமைத்துவப் பிரிவு,
விவசாய, தோட்டப்பயிர்ச் செய்கை முகாமைத்துவ பீடம்,
வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை.

கலாநிதி.எல்.சூரியகொட,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பயிர் அறிவியல் பிரிவு,
விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

# எமது உத்தியோகத்தர்கள்

**தலைவர் (20 சித்திரை 2016 வரை)**

பேராசிரியர்.தம்பிக்க தந்திரிகொட (B.Sc. (இலங்கை), M.Sc., Ph.D. (துர்கம்), FNASSL, FIP (இலங்கை) பௌதீகவியல் பீடத்தின் தலைவர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர் (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம், 2004 முதல் இன்றுவரை)

**தற்போதைய தலைவர் (2016 ஆனியிலிருந்து)**

பேராசிரியர்.எம்.ஜே.எஸ்.விஜயரத்ன, (B.Sc. ((இலங்கை), M.Sc. மிச்சிகன்), Ph.D. (களனி), FNASSL, FIBiol (இலங்கை) விலங்கியல் மற்றும் சூழல் முகாமைத்துவப் பிரிவின் தலைவர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர்

**பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி**

கலாநிதி.முடித லியனாகெதற B.Sc., M.Phil (பேராதனை), Ph.D. (சியோல்)

## நிறைவேற்று உத்தியோகஸ்தர்கள்

**சிரேஷ்ட விஞ்ஞானி**

திருமதி.ஆஷா பிரதெனிய (B.Sc., M.Sc. பேராதனை)
திரு.இந்திக்க ஸ்ரீவர்த்தன B.Sc. (Hons), MEcon. (கொழும்பு)
திருமதி.கமலபாணி தெகம்பட (B.Sc, M.Sc கொழும்பு)

**உதவிப் பணிப்பாளர் - நிதி மற்றும் நிர்வாகம்**

திருமதி.குமாரி பீரிஸ் (B.Com ஸ்ரீ ஜெயவர்த்தனபுர)

**நிர்வாக உத்தியோகத்தர்**

செல்வி.லக்மினி உடுகம (B.A, சப்ரகமுவ)

## உதவி உத்தியோகத்தர்கள்

**செயற்திட்ட உதவியாளர் - நிதி**

திரு.துசித்த ரத்னாயக்க (M.A.A.T.)

**ICT/தரவுத்தள உதவியாளர்**

திரு.அனுரராத இலங்கன்திலக (BIT,கொழும்பு)

**அலுவலக உதவியாளர்**

திரு.ஏ.டி.தனபால
திரு.நிஷாந்த பியதாஸ
திரு.கனிஷ்க ஹிம்ஹான்

**முகாமைத்துவ உதவியாளர்**

திருமதி.நில்மினி பெரேரா (B.Sc ஸ்ரீ ஜெயவர்த்தனபுர)
திருமதி.சயூமி விஜயசிங்க
திரு.நிஷாந்தி மகரகே

**சாரதிகள்**

திரு.அனில் ஹெற்றியாராய்ச்சி
திரு.பிரபாத் ஜயசாந்த
திரு.பிரதீப் இரந்த

## உத்தியோகத்தர் செய்திகள்

1. 20ம் திகதி ஆடி 2016 இல் NASTEC, NASTEC ஐ விட்டு சென்ற சிரேஷ்ட விஞ்ஞானி இந்திக்க ஸ்ரீவர்த்தனவிற்கு பிரியாவிடையளித்து அவரது சிறந்த எதிர்கால தொழிலிற்கு வாழ்த்தியது.
2. 08ம் திகதி ஆவணி 2016 இல், NASTEC புதிய நிர்வாக உத்தியோகத்தராக இணைந்த செல்வி.லக்மினி உடுகம ஐ வரவேற்றது.

## உத்தியோகர்கள் பங்குபற்றிய நிகழ்வுகள்

1. NASTEC இன் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியான கலாநிதி.முடித லியனகெதற மலேசியாவில் 08 முதல் 12ம் திகதி வரை ஆவணி 2016இல் இடம்பெற்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிற்கான STI கொள்கை மற்றும் முகாமைத்துவ சர்வதேச பயிற்சி நிகழ்வில் இலங்கையின் பிரதிநிதியாக கலந்துகொண்டார்.

# நன்றி தெரிவித்தல்

NASTEC கீழ்வரும் மீளாய்வுக்குழு அங்கத்தவர்களிற்கு அவர்களது சிறந்த சேவைக்காக நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

**FCRDI மீளாய்வு**

1. பேராசிரியர்.டபிள்யூ.ஏ.ஜே.எம்.டீ கொஸ்தா, பயிர் அறிவியல் சார் சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் தலைவர், விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் (குழுவின் தலைவர்)
2. கலாநிதி.விஜய ஜயதிலகே, ஓய்வுபெற்ற பேராசிரியர், விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
3. கலாநிதி.எவரட் ஜயமன்னே, முன்னாள் உதவிப் பணிப்பாளர், தெங்கு ஆராய்ச்சி நிலையம்
4. கலாநிதி.கீர்த்தி மொஹொதி, உதவிப்பணிப்பாளர் (ஆராய்ச்சி), தேயிலை ஆராய்ச்சி நிலையம்
5. கலாநிதி.ரேணுகா சில்வா, சிரேஷ்ட விரிவுரையாளர், கால்நடையியல் பீடம், மீன்படியியல் மற்றும் ஊட்டமும், வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை.

**FRDI மீளாய்வு**

1. பேராசிரியர்.எஸ்.சுபசிங்கே பேராசிரியர், விவசாய பீடம், றுகுண பல்கலைக்கழகம்
2. பேராசிரியர்.லலீன் கருணாநாயக்க, பேராசிரியர், பிரயோக விஞ்ஞான பீடம், ஶ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
3. கலாநிதி.நிமல் திஸாநாயக்க, முன்னாள் பணிப்பாளர், நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
4. கலாநிதி.வாசன விஜேயசூரிய, சிரேஷ்ட விஞ்ஞானி, இறப்பர் ஆராய்ச்சி நிலையம்

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின்
2016 மார்கழி 31 இல் நிதி நிலைமை பற்றிய கூற்று

(அனைத்து நிதிப் பெறுமதிகளும் இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)

| | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| காசு,காசுக்கு சமனானவை | 1 | 314,338 | 672,270 |
| வர்த்தகம் மற்றும் பெறுகைகள் | 2 | 2,400 | 17,500 |
| பொருட்பட்டியல் /கையிருப்பு | 3 | 57,881 | 60,235 |
| முற்கொடுப்பனவு | 4 | 930,381 | 885,103 |
| உத்தியோகத்தர் கடன் - குறுகிய கால | 5 | 188,652 | 191,661 |
| | | 1,493,652 | 1,826,769 |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | | | |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் | 6 | 16,025,029 | 3,988,674 |
| மீளச் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் | 7 | 1,275,500 | 1,275,500 |
| உத்தியோகத்தர் கடன் - நீண்டகால கால | 8 | 508,737 | 421,259 |
| | | 17,809,266 | 5,685,433 |
| மொத்த சொத்துக்கள் | | 19,302,918 | 7,512,202 |
| பொறுப்புக்கள் | | | |
| நடைமுறைப் பொறுப்புகள் | | | |
| நடைமுறையல்லா பொறுப்புகள் | 9 | 1,574,380 | 921,022 |
| நடைமுறையல்லாத செலவுகள் | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 10 | 1,216,243 | 2,894,974 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 11 | 2,295,143 | 2,430,916 |
| | | 3,511,386 | 5,325,890 |
| மொத்த பொறுப்புகள் | | 5,085,766 | 6,246,912 |
| மொத்த தேறிய பொறுப்புகள் | | 14,217,152 | 1,265,290 |
| தேறிய சொத்துக்கள்/ பங்குத்தொகுதிகள் | | | |
| திரண்ட நிதியம் | | 2,540,639 | 2,831,946 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | | 16,658,610 | 2,589,250 |
| ஒதுக்குகள் | | (4,982,097) | (4,155,906) |

| | | |
|---|---|---|
| மொத்த தேறிய சொத்துக்கள் /பங்குத்தொகுதிகள் | **14,217,152** | **1,265,290** |

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின்
2016 மார்கழி 31 இல் நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

(அனைத்து நிதிப் பெறுமதிகளும் இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| மீண்டுவரும் அளிப்பு | | 23,556,808 | 19,795,000 |
| மூலதன அளிப்பு – விஞ்ஞான, தொழில்நுட்ப சேவை | | 8,300,000 | 2,135,900 |
| அரசாங்க அளிப்புகளின் கடன் தீர்ப்பனவு – தேய்மானம் | | 2,272,837 | 4,712,636 |
| வருமானம் | 12 | 558,441 | 563,900 |
| | | 34,688,086 | 27,207,436 |
| **செலவு** | | | |
| ஆளணியினர் வேதனங்கள் | 13 | 10,291,548 | 10,327,921 |
| பயணச் செலவுகள் | 14 | 410,472 | 79,142 |
| வழங்கல் மற்றும் நுகர்வுப்பொருள் பாவனைகள் | 15 | 399,440 | 406,549 |
| பராமரிப்பு | 16 | 816,496 | 561,694 |
| ஒப்பந்த சேவைகள் | 17 | 8,428,860 | 5,617,363 |
| மாற்றல்கள் | 18 | 3,160,145 | 2,994,398 |
| S & T சேவைகள் | 19 | 9,729,049 | 1,618,316 |
| தேய்மானம் மற்றும் கடன் தீர்ப்பனவுச் செலவுகள் | 6 | 2,272,837 | 4,712,636 |
| மொத்த செலவு | | 35,508,847 | 26,318,019 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான மிகை/(பற்றாக்குறை) | | (820,761) | 889,417 |
| நிதிச்செலவினம் | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைவ விற்றுப்பெற்ற வருமானம் | | (5,430) | 16,260 |
| குறிப்பிட்ட காலகட்டத்திற்கான தேறிய மிகை (பற்றாக்குறை) | | (826,191) | 905,677 |

மගේ අංකය / எனது இல. / My No. } ரீஈசீ/ஏ/எஸ்ஏஎஸ்ரீஈசீ/1/15/23
ඔබේ අංකය / உமது இல. / Your No. }
දිනය / திகதி / Date } 2016 ஆகஸ்ட் 05

தலைவர்,
தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 [illegible] திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் [illegible]

-----------------------------------------------------------------------------------------------

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் [illegible]ான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் VII ஆவது பகுதியின் 40 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று ஆணைக்குழுவின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
oaggov@sltnet.lk
www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 அம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யும் போது உரிய சொத்து வகுப்புக்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதி மாத்திரம் மீள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்த பெறுமதியில் வெளியிடும் போது மீள் மதிப்பீடு அமுலாகும் திகதி, சுயாதினமான மதிப்பீட்டாளர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டவரா எனவும், சொத்துக்களின் நியாயப் பெறுமதியில் மதிப்பீடு செய்யும் போது மதிப்பிடப்பட்ட முறைமை மற்றும் முக்கியமான எண்ணக்கருக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட எனினும், இன்னும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து நியாயப் பெறுமதியை கணக்குகளில் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் ரூபா 15,445,186 கிரயமான சொத்துக்கள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தல் அதிகாரச்சட்டத்தின் 5(ஆ) பிரிவின் பிரகாரம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குத் தயாரிக்கப்பட்ட "அரசாங்க மற்றும் தனியார் பிரிவுகளின் முயற்சிகளினால் விஞ்ஞான, தொழில்நுட்ப பயன்பாடுகள் தொடர்பாக முன்னைய ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளின் மீளாய்வு அறிக்கை" அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக ஆணைக்குழுவின் செயற்பட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 889,417 மிகையைக் காண்பித்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 542,816 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,432,233 தொகையான அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 3,681,647 இனால் குறைவடைந்த போதிலும் செலவினம் ரூபா 5,113,880 இனால் குறைவடைந்தமையால் மேற்கூறப்பட்ட நிதிவிளைவின் முன்னேற்றத்திற்கு பங்களித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு முதல் கடந்த 04 வருடங்களின் நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக இருந்த பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டின் போது

மிகையாக மாற்றமடைந்திருந்தது. ஊழியர் வேதனங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு சீராக்கப்பட்டதன் பின்னர் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 7,460,849 தொகையான பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது 114 சதவீதத்தால் ரூபா 15,946,234 இற்கு அதிகரித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு
--------------------------------

4.1 செயலாற்றல்
--------------------

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தால் அதிகாரச்சட்டத்தின் 1 ஆவது பகுதியின் 5 ஆவது பிரிவின் பிரகாரம், விஞ்ஞான மற்றும் தொழில்நட்ப அபிவிருத்திக்கான கொள்கை மற்றும் திட்டமிடல் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல், பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்தல், சுகாதார, போசனை மற்றும் வறுமையை நீக்குதல், கல்வி, பயிற்சியும் ஆராய்ச்சியும் தொடர்பாக தேவையான மனித மற்றும் ஏனைய வளங்களின் அபிவிருத்திக்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நிதியத்தை ஒதுக்குவதற்குரிய கொள்கை மற்றும் திட்டங்களைத் தயாரித்தல், இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் செயலாற்றலை மீளாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான அறிக்கையொன்றை வருடாந்தம் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தல் இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாட்டை இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை கூட்டுதல் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு மண்டபமொன்றை வழங்குதல் மற்றும் அது தொடர்பாக அமைச்சருக்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் என்பன ஆணைக்குழுவின் பணியாக இருந்தது.

மேற்கூறப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களை இனங்கண்டு மீளாய்வினை ஆரம்பிப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாட்டிற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,995,861 தொகை செலவில் 7 ஆவது இரண்டாண்டுகளிற்கு ஒரு முறையாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாடு நடாத்தப்பட்டிருந்த போதிலும், அந்த மாநாட்டின் போது 10 துறைகளுக்குரிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியொன்றை ஏற்படுத்துவதற்கு இணக்கப்பாட்டிற்கு வந்திருந்த போதிலும், அந்த செயற்பாடற்றுக் காணப்பட்டன.

## 4.2 கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டலிற்கு முரணாக மீளாய்வாண்டிற்காக ஒப்பந்தப் பெறுமதி ரூபா 763,477 தொகையான பாதுகாப்பு சேவை எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமல் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது.

## 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 18 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 15 ஆகவும் இருந்தமையால் 03 பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ள 02 விஞ்ஞானிகளின் பதவி மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவி என்பற்றுக்காக தேவையான ஆட்சேர்ப்புக்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 03 கல்விக் குழுக்களின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில் 2 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகளின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அறிக்கை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவகத்தின் ஆரம்ப காலம் முதல் காணப்படுகின்ற விஞ்ஞான ரீதியிலான பதவியணியினரின் பற்றாக்குறையினால் இந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு

முடியாதிருந்ததாக ஆணைக்குழுவின் தலைவரினால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133(1) (அ) பிரமாணத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்ககாய்வு நடவடிக்கைகளைச் செய்வதற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான வருடாந்த கணக்காய்வுத் திட்டமொன்று 2015 செப்தெம்பர் 02 ஆந் திகதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரினால் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 21 விடயங்களில் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கொள்வனவு | முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமல் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டமை |

| | |
|---|---|
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | முறையான மதிப்பீடு தயாரிக்கப்படாமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை |
| (இ) பதவியணியினரின் நிர்வாகம் | விஞ்ஞான சேவைகளிலுள்ள பதவியணியின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |

ஒப்பம் :- எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

k/y

**<u>தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) (இ) வாசகத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை</u>**

தங்களால் அனுப்பப்பட்ட 2017 யூன் 30 ஆம் திகதிய ரீஈசீ/ஏ/என்.ஏ.எஸ்.ரீ.ஈ.சீ./1/16/10 ஆம் திகதிய மேற்படி அறிக்கை தொடர்பிலான தெளிவுபடுத்தல் கீழே தரப்பட்டுள்ளது.

**<u>2.2 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்துத் தெரிவித்தல்</u>**

**<u>2.2.1 இலங்கை அரச கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியொழுகாமை</u>**

(i) மற்றும் (ii)

எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்றபோது i) மற்றும் ii) பந்திகளின் மூலம் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களுக்கு ஏற்புடையதான தாங்கிநிற்கும் பெறுமதிகளை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் பிரகாரம் சரியாக வெளிப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**<u>2.3 சட்டங்கள் , ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காமை</u>**

அ) சட்டத்தின் 05 (ஆ) இலக்க பந்தியின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான அறிக்கையை தயாரிக்கும் பொருட்டு ஏற்புடைய நிறுவனங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதால், அந்நிறுவனங்களிலிருந்து தகவல்கள் உரிய காலத்தில் வழங்கப்படாமையின் காரணமாக இவ்வறிக்கையை தயாரித்தல் தாமதமடைந்தது. எவ்வாறாயினும், தற்போது இவ்வறிக்கை பூர்த்தி செய்யப்பட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரமும் பெறப்பட்டு கௌரவ விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை தற்போது நடைபெற்று வருகின்றது.

ஆ) வருகை மற்றும் வெளிச்செல்லலை உறுதிப்படுத்துவதற்காக விரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரமொன்று தற்போது பயன்படுத்தப்படுகின்றது.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

அ) செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் 06 நிறுவனங்களின் மீளாய்வு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட போதிலும், பின்வரும் காரணங்களால் அந்த 06 நிறுவனங்களில் 03 நிறுவனங்களின் மாத்திரம் மீளாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

i) கமத்தொழில் ஆரய்ச்சி நிறுவனத்தை மீளாய்வு செய்வதற்காக கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைப் பேரவையின் (CARP) இணக்கப்பாட்டைப் பெறுவதற்கு குறிப்பிட்டத்தக்கதொரு காலம் எடுத்தமை.

ii) மீளாய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்படும் குழுக்களின் அங்கத்தவர்கள் மிகவும் கடமைப்பளுமிக்க ஆட்களாதலால் குழுக் கூட்டங்கள் மற்றும் நிறுவன அவதானிப்பு நடவடிக்கைகளுக்கு நேரத்தை ஒதுக்குதல் மிகச் சிரமமாயுள்ளமை.

iii) மீளாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற நிறுவனங்களால் வழங்கப்பட வேண்டிய அறிக்கைகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமையின் காரணமாக மீளாய்வு நடவடிக்கைகள் தாமதமடைந்தமை.

(ஆ) எமது நிறுவனத்தின் கடமைப்பொறுப்பு யாதெனில் ஆராய்ச்சிப் பத்திங்களைக் கோருதலும் மற்றும் நிறுவனத்திற்குக் கிடைக்கின்ற ஆராய்ச்சிப் பத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு இளம் விஞ்ஞானிகளின் கருத்தாடலை (Young Scientists Symposium) நடத்துவதுமாகும் என்பதோடு, ஆராய்ச்சிப் பத்திரங்கள் கிடைக்கின்ற போக்கு குறைவடைதலானது ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்கு புறம்பானதொரு விடயமாகும்.

(இ) 2017 ஆம் ஆண்டில் “நாம்” நிலயத்தினால் நடத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை 6 அல்ல 7 ஆகும். இதில் 4 செயலமர்வுகளில் இலங்கையின் பிரதிநிதிகள் பங்குபற்றினார்கள் என்பதோடு, மீதி 03 செயலமர்வுகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் விண்ணப்பங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

### 4.2 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்

துப்புரவேற்பாட்டு சேவை மற்றும் பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக விலை மனுக்கள் கோரப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத்தின் பணிப்புகள் மற்றும் நிபந்தனைகள் சமர்ப்பிக்கப்படும் என்பதோடு, அவற்றுக்கு இணங்குகின்ற சேவை வழங்குனர்களிடமிருந்து மாத்திரம் சேவை வழங்கல்கள் பெறப்படும். அதற்கமைய துப்புரவேற்பாட்டு சேவை மற்றும் பாதுகாப்புச் சேவையானது நிறுவனத்தின் நிபந்தனைகளுக்கு இணங்குகின்ற சேவை வழங்குனர்களிடமிருந்து மாத்திரமே

பெறப்படும். ஆயினும், துப்புரவேற்பாட்டு சேவை மற்றும் பாதுகாப்புச் சேவைக்கு மீண்டும் சேவை வழங்கல்கள் பெறப்படுகின்றபோது எழுத்துமூல உடன்படிக்கைகளை செய்துகொள்ளமாறு அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

## 5. கணக்கு நடவடிக்கைகளின் தன்மையும் நல்லாட்சியும்

### 5. 1 உள்ளக கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கு ஏற்புடைய மேற்படி கணக்காய்வுப் பந்தி தொடர்பில் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் அறிவுறுத்தப்பட்டார்.

### 5. 2 வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு

நிறுவனத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடு ரூபா 36 மில்லியனாக காணப்பட்டதோடு, அதில் ரூபா 25 மில்லியன் மீண்டுவரும் செலவுக்காகவும் ரூபா 11 மில்லியன் மூலதனச் செலவுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் உண்மைச் செலவு ரூபா 32 மில்லியனாகும். அதாவது சதவீதமாக 89% ஆகும். மீதி 11%, அதாவது ரூபா 3 மில்லியன் சேமிக்கப்படுவதற்கான காரணம் பின்வருமாறு.

I) நிறுவனத்தினால் திட்டமிடப்பட்டவாறு ஆட்சேர்ப்பதற்கு உத்தேசமாயிருந்த இரண்டு விஞ்ஞானிகள் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பதற்கு இயலாமற்போனமை.

II) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் மீளாய்வுக்காக நியமிக்கப்படும் குழுக்களின் அங்கத்தவர்கள் மிகவும் கடமைப்பளுமிக்க ஆட்களாதலால் குழுக் கூட்டங்கள் மற்றும் நிறுவன அவதானிப்பு நடவடிக்கைகளுக்கு நேரத்தை ஒதுக்குதல் மிகச் சிரமமாயுள்ளமை மற்றும் மீளாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற நிறுவனங்களால் வழங்கப்பட வேண்டிய அறிக்கைகளை வழங்குவதில் தாமதம் ஏற்படுகின்றமையின் காரணமாக மீளாய்வு நடவடிக்கைகள் தாமதமடைதல்.

## 6. முறைமை மற்றும் நிர்வாகத் துறைகள்

மேற்படி மூன்று நிர்வாகத் துறைகள் தொடர்பில் விசேட கவனத்தைச் செலுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**கலாநிதி எம்.ஜே.எஸ் விஜயரத்ன**
தலைவர்